2010 மே 12]

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்களுக்குக் கூறிய அதே பதில்தான் இவருக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

174—

கட்டட வசதி

***59281—திரு. வே. மாரிமுத்து:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம் போதுமான இட வசதியுடனும், அடிப்படை வசதியுடனும் ஒருங்கிணைந்து அமையப் பெற்று நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை வட்டம், 85 வருவாய் கிராமங்களைக் கொண்ட வட்டமாகும். நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலகம், மாவட்டத் தலைநகரமான நாகப்பட்டினத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது 150 ஆண்டு காலப் பழமையான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கட்டடமாகும். ஒரு காலத்திலே புத்த விஹாரின் பகுதியாகவும் அந்தக் கட்டடம் செயல்பட்டிருக்கிறது. அது முழுவதும் மண்ணால் கட்டப்பட்ட கட்டடமாகும். அங்கே வட்ட வழங்கல் அலுவலகமும் தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் மழைக் காலங்களில் அதிகமாக நீர்க் கசிவுக்கு உட்படக்கூடிய அலுவலகமாகவும் அது இருக்கிறது. கிராமப்புற மக்கள் அதிகமாக வந்து செல்கின்ற காரணத்தால், அதற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, அது பழமையான கட்டடம்தான், அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதே சமயத்திலே, 2008-2009 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கே பழுது நீக்கம் செய்வதற்காக 46 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, அந்தக் கட்டடம் புதுப்பிக்கப்பட்டு, நல்ல நிலையிலே இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எனக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். எனவே, அந்தக் கட்டடம் பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் இருப்பதால், தற்சமயம் புதிய கட்டடம் கட்டுவதற்குரிய வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

திரு. வே. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த அலுவலகத்திற்கு ஒருவர் சென்றால், எதிரே வரக்கூடியவர்களுக்கு வழி விடுவதற்குக்கூட இடவசதியற்ற நிலையில் அந்த அலுவலகம் இருக்கிறது. அங்கே வரக்கூடிய நூற்றுக்கணக்கான மக்கள், அலுவலகத்திற்கு வெளியே வெயிலில் நிற்கவேண்டிய சூழல் இருக்கிறது. அந்த அலுவலகத்தை ஒட்டித்தான் மாவட்டக் கிளை சிறைச்சாலையும் இருக்கிறது. அதிகமாக மக்கள் கூடுகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால், புதிய கட்டடம் தேவை. அது மட்டுமல்ல, அந்த வட்டாட்சியர் அலுவலகத்தின் தற்போதைய தோற்றம் எப்படி இருக்கிறதென்றால், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படக்கூடிய மக்கள் நிவாரணம்

2010 மே 12]

கேட்டு வரக்கூடிய அந்த அலுவலகமே, தற்பொழுது இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட அலுவலகம்போல் அதனுடைய தோற்றம் தெரிகிறது. எனவே, அவசர, அவசியம் கருதி, உடனடியாக இந்த நிதியாண்டிலேயே அதற்கொரு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வட்டாட்சியர் அலுவலகம், நகரினுடைய மிக முக்கியமான மக்கள் நடமாடக்கூடிய பேருந்து நிலையத்திற்கு அருகில் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டியது உண்மைதான். மக்கள் அதிகமாக வருகின்ற பகுதியாகத்தான் அது இருக்கிறது. Bus stand-க்கு அருகில் உள்ளது. விசாலமாகவும் இல்லை என்கிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டிலே ஏறத்தாழ இதுவரை 30 புதிய வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு மேல் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து கட்டப்பட்டும் வருகின்றன. அந்த அலுவலகங்களுடைய தோற்றம் மிகவும் எழில்மிகு தோற்றமாக, ஒரு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அளவிற்கு இருக்கிறதே என்று மக்கள் நினைக்கக்கூடிய அளவிற்கு பிரமாண்டமாக இருக்கின்ற காரணத்தால், எல்லோருக்கும் அப்படியொரு எண்ணம் வந்துவிட்டது. பழமையான கட்டடம் எங்கெங்கு இருக்கிறதோ, அங்கெல்லாம் புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதைப் படிப்படியாகத்தான் அரசு நிறைவேற்றும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தாலுகா அலுவலகம் மிகவும் பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது. வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட கட்டடமாகும். மழைக் காலங்களில் ஒழுகி, கோப்புகள் நனையும் நிலையில் உள்ளன. 2007-லிருந்து பல முறை கோரிக்கை வைத்து, புதிய கட்டடம் கட்ட

[2010 மே 12

ரூ.133 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, அமைச்சர் அவர்கள் அவசர, அவசியம் கருதி, கட்டடம் கட்ட முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். தவிர, காஞ்சிபுரத்தில் உள்ள 3 பத்திரப் பதிவு அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இதில் ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் மிகவும் பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்குகிறது. கோப்புகள் வைக்கும் அறை மிகவும் சேதம் அடைந்துள்ளது. ஆகவே, எல்லாப் பத்திரப் பதிவு அலுவலகங்களையும் ஒருங்கிணைத்து, ஒரே இடத்தில் புதிய கட்டடம் கட்டி, அண்ணா பிறந்த ஊருக்குப் பெருமை சேர்க்க மாண்புமிகு டாடா, டாடா சாமி அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மாரிமுத்து, திருமதி கமலாம்பாள் பழைய கட்டடத்தைப் புதியதாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்த ஆண்டுகூட பழைய கட்டடம் என்ற அடிப்படையில்தான் தென்காசி, அம்பாசமுத்திரம், கோவில்பட்டி இம்மூன்றும் 120 ஆண்டுகளைக் கடந்த கட்டடங்களாக இருக்கின்ற காரணத்தால் எடுக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, பழைய வட்டாட்சியர் அலுவலகங்கள் இருக்கின்ற இடங்களில்தான் சிறைச்சாலைகள், கிளை சிறைச்சாலை, பதிவுத் துறை அலுவலகம், நீதிமன்றங்கள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றிருக்கின்றன. இந்த அரசு ஒவ்வொரு ஆண்டும் பழைய கட்டடங்களைப் புதுப்பிக்கின்ற பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றது. வருகின்ற காலத்திலே நிச்சயம் அரசு அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதைச் செய்து தருவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பொன்னுதுரை.

திரு. செ. பொன்னுதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தாலுகாவிலுள்ள

2010 மே 12]

கருமாண்டிச் செல்லிபாளையம், கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம், ஊராட்சிமன்ற அலுவலகத்தை ஒட்டியே V.A.O. Office கட்டப்பட்டது. இங்கே, கருமாண்டிச் செல்லிபாளையம் கிராமத்தில் இரண்டு கிராம நிருவாக அலுவலகங்களைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, தமிழகத்திலே 200-க்கும் மேற்பட்ட கிராம நிருவாக அலுவலகங்கள் கட்டப்பட வேண்டுமென்று நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கையிலே விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கிராம நிருவாக அலுவலகங்கள் குடியிருப்புடன் சேர்த்துக் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்து தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. நிச்சயம் வருகின்ற காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

முற்பகல் 10-00

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை என்பதுதான் பல்வேறு அரசு நலத் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதற்கு இருக்கக்கூடிய ஒரு மிக முக்கியமான துறை. ஆனால், அந்தத் துறை இயங்கக்கூடிய கட்டடங்கள் பழமையான கட்டடங்களாகவும், கட்டடமே இல்லாமல் இருப்பதாகவும் நமது உறுப்பினர்கள் தொடர்ந்து தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதாவது ஒரு கட்டடம் இடிந்தால், வருவாய்த் துறையினர்தான் நிதி வழங்குவார்கள். வருவாய்த் துறையில் இருக்கக்கூடிய கட்டடமே இடிந்தால், அது மிகவும் சிரமத்தை ஏற்படுத்தும். ஆகவே, வருவாய்த் துறையினுடைய கட்டடங்களைக் கட்ட வேண்டும். அங்கு கணினிகூட இல் ாமல்

இருக்கிறது. தாலுகா அலுவலகங்களில் கணினிகூட இல்லை. ஆகவே ஒரு அடிப்படையான குறைந்தபட்சத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அரசு பரிசீலிக்க முன்வருமா என்பதனை அமைச்சர்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல 5-வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, 3 விதமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பணியில் எங்களை முடுக்கிவிட்டார்கள். அதிலே ஒன்று, பழைய கட்டடங்களைப் புதுப்பிக்கின்ற பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து, முதல் ஆண்டிலேயே ஏறத்தாழ 9 பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பதற்காக ஆணையிட்டு, நிறைவேற்றினோம்.

அதேபோல, புதிய வட்டங்களை உருவாக்குகின்ற பணியும், அதற்குக் கட்டடங்கள் வழங்குகின்ற பணிகளும் இன்னொருபுறம் நடைபெறுகின்றன. இன்னொருபுறம், அவர் சொன்னதைப்போல, பழுதடைந்திருக்கிற பழமையான வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் எந்த அலுவலகமாக இருந்தாலும், வருவாய்த் துறையிலிருக்கின்ற அத்தனை அலுவலகங்களையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகமாக இருந்தாலும், அவற்றையும் பழுது நீக்குவதற்காக, அதற்கும் நிதியொதுக்கிக் கொடுத்தார்கள். அந்த அடிப்படையிலேதான் சேலம் மாவட்டத்திலேகூட மிகவும் பழுதடைந்திருந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருச்சியிலே 12 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, அதுவும் முடிவடையும் தருவாயிலே இருந்து கொண்டிருக்கின்றது. ஆக, மாவட்ட ஆட்சியர் அலுவலகமாக இருந்தாலும், வட்டாட்சியர் அலுவலகமாக இருந்தாலும், வருவாய்த் துறையிலே இருக்கின்ற அத்தனை அலுவலகங்களையும் பழுது நீக்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதியொதுக்கீடு செய்து அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து நிச்சயம் எந்தக் கட்டடமும் இடியாத அளவுக்கு, யாருக்கும் ஆபத்து வராத அளவுக்கு, பாதுகாப்பாக அரசு அந்தப் பணியை மேற்கொள்ளும்.

2010 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராம. சுப்புராம்.*

திரு. ராம. சுப்புராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் மூலமாகப் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, 2008 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி, கறம்பக்குடி ஆகிய 2 வட்டங்களை அறிவித்தார்; நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதற்கான அலுவலகங்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மத்திய உள் துறை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களும் வந்து திறந்து வைத்தார்கள். அந்தக் கட்டடங்களையும் விரைவாகக் கட்டித் தர வேண்டி மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நீண்ட காலமாகப் பட்டா கிடைக்காமல் இருந்தது. இந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்மீது நான் பேசிய பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பட்டாவை வழங்குவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்மூலமாக உத்தரவிட்டு, அந்தப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கும் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

175—

பத்திரப் பதிவு அலுவலகம்

***54471—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், குன்னத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்